දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E - mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/APP/HB/31/2023

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2026.06.

பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 04/2023 (I)

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள்,

**இலங்கை நிர்வாக சேவையின், இலங்கை திட்டமிடல் சேவையின் மற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I பதவிகளுக்கு நியமித்தல்**

மேற்குறித்த விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2023.10.11 ஆம் திகதிய பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 04/2023 இன் மீது தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. குறித்த சுற்றறிக்கையின் 05 மற்றும் 06 ஆம் பிரிவுகளைப் பின்வருமாறு திருத்தியமைப்பதற்குப் பகிரங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

05. **நியமனத்திற்குத் தகைமை பெறும் உத்தியோகத்தர்களின் (உத்தியோகத்தர் குழாம்) பட்டியலொன்றைத் தயாரித்தல்.**

5.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் ஒழுங்குவரிசைக்கு அமைய வெற்றிட எண்ணிக்கையைப் போன்று 120% உத்தியோகத்தர்களை உள்ளடக்கி, நியமனம் செய்வதற்குத் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளின் பட்டியலொன்று தயாரிக்கப்படும்.

06. **பதவிக்கு நியமித்தல்**

6.2 குழாத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் வெற்றிடமாகவுள்ள அனைத்துப் பதவிகளுக்கும் தமது விருப்பத் தேர்வை ஒழுங்குவரிசைப்படி குறிப்பிடல் வேண்டும். எவரேனுமொரு உத்தியோகத்தர் வெற்றிடமாகவுள்ள அனைத்துப் பதவிகளுக்கும் முன்னுரிமைக்கு அமைய விருப்பத் தேர்வுகளைக் குறிப்பிடாவிடின், குறித்த உத்தியோகத்தர்களை அப் பதவிகளுக்கு நியமனம் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட மாட்டாது. குறித்த உத்தியோகத்தர்களின் விருப்பத் தேர்வுகளைக் கவனத்திற் கொண்டு அந்தந்த நிறுவனங்களில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்குக் குழாத்திலிருந்து பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரைத் தெரிவு செய்யும் அதிகாரம் ஏற்புடைய நிறுவனத் தலைவர்களுக்கு உரித்துடையதாகும். ஏற்புடைய அமைச்சின் செயலாளர் எந்தவொரு உத்தியோகத்தரையும் நியமனத்திற்காகப் பரிந்துரை செய்யாத சந்தர்ப்பங்களில் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் குறித்த நியமனம் மேற்கொள்ளப்படும்.

03. மேற்குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் மாற்றமின்றி தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
பகிரங்க சேவை ஆணைக்குழு